# Folk Cultural Elements in Sangha Literary Kurinji Songs

**C. Krishnamoorthy[1] & M. Kavitha[2]**

*[1]PhD., Part Time, Research Scholar, Department of Tamil, Erode Arts and Science College Rangamapalayam, Erode, Tamil Nadu, India*

*Assistant Professor, Department of Tamil, Erode Arts and Science College, Rangamapalayam, Erode, Tamil Nadu, India*

*Article History*

**Received:** 18.06.2024

**Accepted:** 20.07.2024

**Published:** 30.07.2024

**Corresponding Author**
C. Krishnamoorthy

**Email Id:**
drkrispriya@gmail.com

**Citation:**
Krishnamoorthy, C., and M. Kavitha. "Folk Cultural Elements in Sangha Literary Kurinji Songs." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. S1, 2024, pp. 10–15.

*Abstract*

*The Tamil Cultural society has been followed by People of tamil Nadu since time immemorial. The purpose of this article is to Research and discuss the cultural elements that are being followed by the folk people of Tamil Nadu, such as deity worship, element Request to god, Folk sad songs, Riddle. etc.*

***Keywords: Tamil Culture, Storytelling, Deity Worship***

*References*

1. *Kurunthogai, Song 362.*
2. *Puranaanooru, Song 112.*
3. *Kalithogai, Song 9.*
4. *Kurunthogai, Song 3.*
5. *Aganaanooru, Song 98.*

# சங்க இலக்கியக் குறிஞ்சிப் பாடல்களில் நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள்

*சி. கிருஷ்ணமூர்த்தி*
முனைவர் பட்ட ஆய்வு மாணவர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

*முனைவர் மு. கவிதா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

***ஆய்வுச்சுருக்கம்***
*தமிழர் பண்பாடு சங்ககாலம் தொட்டு தொடர்ந்து வழிவழியாகத் தமிழர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. தற்பொழுது தமிழக நாட்டுப்புற மக்களால் பின்பற்றப்பட்டு வரும் பண்பாட்டுக் கூறுகளான, தெய்வ வழிபாடு, நேர்த்திக் கடன்கள், ஒப்பாரிப் பாடல்கள், விடுகதைகள் போன்றன சங்ககாலக் குறிஞ்சித்திணைப் பாடலக்ளில் இருந்துள்ளன என்பது குறித்து ஆராய்ந்து எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***முக்கியச்சொற்கள்:*** *தமிழர் பண்பாடு, விடுகதை, தெய்வ வழிபாடு*

**முன்னுரை**

*உலகளவில் தமிழர்களின் பண்பாடு சிறப்பு பெற்று விளங்குவது அனைவரும் அறிந்ததே. அத்தகையை சிறப்பு வாய்ந்த பண்பாட்டுக் கூறுகளைப் பழங்காலம் முதல் இன்று வரை, பின்பற்றிப் பாதுகாத்து வருவது நாட்டுப்புற மக்களே ஆவார். அவ்வகையில், இன்றைய நாட்டுப்புற மக்களின் பண்பாட்டுக் கூறுகளான தெய்வ வழிபாடு, நேர்த்திக்கடன், ஒப்பாரிப் பாடல்கள், விடுகதைகள் போன்றன குறித்து சங்க இலக்கியங்களின் குறிஞ்சித் திணைப் பாடல்களில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**பண்பாடு - விளக்கம்**

*பண்பாடு என்பது ஒரு குழுவின் அல்லது சமுதாயத்தின் தொன்று தொட்டு வழங்கி வரும் வாழ்வியல் நிகழ்வைக் குறிக்கும். பண்பாடு என்ற சொல் ''பண்படு' என்னும் சொல்லிலிருந்து தோன்றியதாகும். பண்படுத்தல் என்றால் சீர்படுத்துதல் செம்மைப்படுத்துதல் எனப் பொருள்படும்.[1] பண்பாடு பற்றி இ.பி.டெய்லர் என்பவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன். இந்நிலையில் அவன் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கம், கோட்பாடுகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கிய ஒரு முழுமையான தொகுப்பே பண்பாடு ஆகும்.[2] எனவே பண்பாடு நிலையான தன்மை கொண்டது. பண்பாட்டுக் கூறுகள் மாறாத, அழியாத தன்மையுடையன. மனிதன் அழிந்தாலும், அழியாத பண்பாடு அவனைத் தொடர்ந்து வரும் எனலாம். சங்க காலம் தொட்டு இன்று வரை தொடர்ச்சியாக வாழ்ந்து வரும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளைப் பாதுகாத்து வைத்திருப்பவர்கள் கிராமப்புற மக்கள்தான். இந்த மக்கள்தாம் அவர்கள் அறியாமலே மக்கள் பண்பாட்டுப் புதையல்களை சுமந்து நிற்கிறார்கள் என்பதும் அறியத்தக்கது.[3] எனப் பண்பாடு குறித்து இந்திரன் குறிப்பிடுகிறார். இதன் மூலம் தமிழர் பண்பாட்டை நாட்டுப்புறமக்கள் சங்க காலம் தொட்டு பாதுகாத்து பின்பற்றி வருகின்றனர் என்பது புலனாகிறது.*

### தெய்வ வழிபாடு

தமிழகத்துக் கிராமப்புற தெய்வ வழிபாட்டில் நாள் வழிபாடும் விழாக்கால வழிபாடும் நேர்த்திக்கடனும் சிறப்பிடம் பெறுகின்றது. இவை பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்களிலும் காணமுடிகின்றது.

### கால் நாட்டல்

நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு விழாக்களில் அதனை உறுதி செய்யும் நிகழ்வாக கோவிலில் கால் நாட்டுதல் நடைபெறுவது வழக்கமாகும். இதனை சங்க இலக்கியமான கலித்தொகைக் கீழக்கண்டவாறு எடுத்துரைக்கின்றது.

**ஆல்அமர்ச் செல்வன் அணிசால் மகன்விழாக்**
**கால்கோள் என்று ஊக்கி கதுமென நோக்கி**[4]

திருவிழாக் காலங்களில் கிராமப்புற மக்கள் திருவிழாவில் இரவு பகல் பாராமல் பங்கு பெற்று மகிழ்வுறுவர். குறிப்பாக,

- விழா சாட்டுதல்,
- கரகம் பாலித்தல்,
- கும்பம் பாலித்தல்,
- கம்பம் நடுதல்,
- மாவிளக்கு எடுத்தல்,
- கலை நிகழச்சிகள்,
- அன்னதானம்

போன்ற பல்வேறு நிகழச்சிகள் இரவு நேரங்களில் நடைபெறுவதைக் காணமுடிகிறது. இதுபோலவே சங்க காலத்தில் தூக்கத்தையும் மறந்து மக்கள் விழா நிகழச்சிகளில் பங்கேற்றமையை அகநானூற்றுக் குறிஞ்சிப் பாடல் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின்றது.

**இரும்பிழி மகாஅர் இல் அழுங்கல் மூதூர்**
**விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்.**[5]

### நேர்த்திக் கடன்

நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் நேர்த்திக்கடன் என்பது முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. தெய்வம் எனக்கு இன்னது செய்தால், நான் இன்னது செய்வேன் என்ற அடிப்படையில் நேர்வது நேர்த்திக்கடன் ஆகும். இந்நேர்த்திக் கடன்களை தமிழகத்தில் அனைத்து ஊர்களிலும் காணலாம். நேர்த்திக்கடன்களில் குறிப்பாக,

- மொட்டையடித்தல்
- அலகு குத்துதல்
- அக்னிச்சட்டி எடுத்தல்
- தீ மிதித்தல்
- ஆடு கோழி பலியிடுதல்
- வேல் எடுத்து வைத்தல்
- அன்பளிப்பு வழங்குதல்
- அன்னதானம் வழங்குதல்

போன்றன செய்து மக்கள் தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்துவதைப் பொதுவாக காணமுடியும். சங்க இலக்கியத்திலும் இத்தகையை நேர்த்திக்கடன் செலுத்தியுள்ளனர். குறிஞ்சி நில கானவன் தினைப்புலத்திலுள்ள பாதி தினைகளை தெய்வத்திற்கு நேர்ந்து விட்டிருந்ததையும் அவற்றை மயில் உண்டது கண்டு அதிச்சியுற்றதையும் கீழக்கண்ட குறுந்தொகைப் பாடல் எடுத்துரைக்கிறது.

**புனைவன் துடிகைப் பொன்போல் சிறுதிணைக்**
**கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்**
**அறியாது உண்ட மஞ்ஞை ஆடுகள்**
**வெளிஉறு வனப்பின் செய்துற்று நடுங்கும்**[6]

### உயிர்ப்பலியிடுதல்

நாட்டுப்புறக் காவல் தெய்வங்களுக்குப் பலியிடுதல் என்பது இன்று வழக்கமாகவுள்ளது. இப்பலியிட்டு வழிபடும் நிகழ்வானது சங்க காலத்திலும் இருந்துள்ளதைக் கீழ்க்கண்டக் குறுந்தொகைப் பாடல் எடுத்துரைக்கின்றது.

**பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு**
**சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி**
**வணங்கினை கொடுத்தியாயின் அணங்கிய**
**விண்தோய் மாமலைச் சிலம்பன்**
**ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே**[7]

என்ற பாடலின் மூலம் சங்க காலத்தில் குறிஞ்சி நிலத் தெய்வமான வேலனுக்கு செம்மறி ஆடு பலியிட்டு மக்கள் வழிபட்டுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்களை எண்ணிப் பெண்கள் பாடும் ஒரு வகை இசைப்பாடலே ஒப்பாரி

*என்பர். ஒப்பாரி என்பதை ஒப்பூ+ஆரி என்று பிரிக்கலாம். இதற்கு ஒப்பு சொல்லி ஆரிப்பது என்பது பொருளாகும். ஒப்பாரியின் கருப்பொருள் பற்றிச் சு.சண்முகசுந்தரம் பின்வருமாறு குறிப்பிடுகிறார். இதில் இறப்பும் இறப்பால் வந்த இழப்பும் கருப்பொருள் ஆகின்றன. இழப்பு என்பது பாதுகாப்பினை இழப்பது. பாதுகாக்கப்பட வேண்டியவற்றை இழப்பது என இரு வகைப்படும்.*[8]

*பனைமரத்து நிழலில் பறவைகள் வந்து தங்கி இளைப்பாறுவது வழக்கம். அந்த மரம் புயலில் சாய்ந்து விட்டால் பறவைகள் தங்க நிழலின்றித் தவிக்கும். அதுபோல தந்தையை இழந்து நாங்கள் தவிக்கின்றோம் என்று பெண்கள் புலம்பிப் பாடும் நாட்டுப்புற ஒப்பாரிப்பாடல் பின்வருமாறு.*

***கூந்தல் பனஞ்சொலை***
***குயிலடையும் மண்டபங்க - நீங்க***
***கூந்தல் பனைசாஞ்சா - நாங்க***
***குயிலடைய அஞ்சுறோம்பா***
***மட்டை பனஞ்சோலை***
***மயிலடையும் மண்டபங்க - நீங்க***
***மட்டை பனைசாஞ்சா - நாங்க***
***மயிலாட அஞ்சுறோம்பா9***

*என்று தந்தையின் மறைவை நினைத்து அழும் பெண்களின் பாடல்களில் சோகம் நிறைந்து காணப்படுகிறது. இதே போன்று பறம்பு மலையை இழந்த பாரியின் பெண்கள் இருவர் நிலவினை நோக்கிப் பாடியிருப்பதைக் கீழ்க்கண்டப் புறநானூற்றுப் பாடலில் காணலாம்..*

***அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்***
***எந்தையும் உடையோம் எங்குன்றும் பிறர் கொளார்***
***இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலிவில்***
***வெண்றெரி முரசின் வேந்தர் எம்***
***குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே***[10]

*இப்பாடல் கையறுநிலை என்று பெயரிட்டுள்ளனர். கையறுநிலை என்றால் ஆதரவற்ற நிலை ஆகும். ஆதரவற்ற நிலையில் சோகம் மேலிடுவதும் அப்போது பாடல்கள் தோன்றுவதும் இயற்கை. என்றால் இவ்வகைப் பாடல்களும் ஒப்பாரியாகத்தான் இருக்க வேண்டும்.*

## விடுகதை

*விடும் கதை - விடுவிக்கும் கதை என்பதே விடுகதையாகும். மறை பொருளிலிருந்து விளக்கும் முயற்சியே விடுகதை ஆகும். வினா எழுப்பி விடையளிக்குமாறு இவ்விடுககதைகள் அமையும். அறிவூட்டுவது சிந்தனையை தூண்டுவது இதன் நோக்கமாகும். யாப்பு முறையில் சுட்டும்போது தொல்காப்பியர்,*

***பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே***[11]

*என்றுரைக்கிறார். பிசி, நொடி, புதிர், விடுகதை, வெடிபோடுதல், அழப்பாங்கதை ஆகியன இதன் வேறு பெயர்களாகும்.*

## சங்கப்பாடலில் விடுகதை

***துணங்கை அம்செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு***[12]

*எனும் அடிகள் வாயிலாக பேய் மகளிர் கொற்றவைக்கு விடுகதை என்னும் நொடி விட்டதை கடியலூர் உருத்திரங்கண்ணனார் சுட்டுவார்..*

## வாழ்க்கை இயல்பு கூறும் விடுகதை

*தலைவி தலைவனுடன் உடன்போக்கில் பெற்றோரை நீங்கிச் சென்றாள். தலைவி மீது கொண்ட பற்றினால் அவன் சென்ற வழியிலேயே தொடர்ந்து வந்தாள் செவிலி. வழியில் துறவி ஒருவரை பார்த்தாள். அவரிடம் எனது மகளைப் பார்த்தீர்களா? என்று வினவினாள். அச்சான்றோர் சொன்ன பதிலே விடுகதைபோல் இருந்தது. அவர்கள் சொன்ன கருத்தை ஆழ்ந்து நோக்கினால் வாழ்க்கை இயல்பு இதுதான் என்று புரிந்து கொள்ளும் பக்குவம் வந்து விடும். அப்பாடல் பின்வருமாறு,*

***பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை***
***மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதான் என் செய்யும்?***
***நினையுங்காலை நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!***
***சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை***
***நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதான் என்செய்யும்***
***தேருங்காலை நும்மகள் நுமக்கும் ஆங்கனையளே!***
***ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை***
***யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?***[13]

இப்பாடலில் நறுமணப் பொருளான சந்தனம் பூசிக்கொள்பவரல்லது மலையிலே பிறந்தாலும் மலைக்கு அவைதான் என்ன பயன்? சிறந்த வெண்முத்துகள் அணிபவருக்கு பயன்படுவதன்றி கடலிலே பிறந்தாலும் கடலுக்கு அவைதான் என்ன பயன்? அதுபோலவே உன் மகள் உனக்கும். அதாவது அவள் அவனுக்குப் பிடித்தவனோடு வாழ்வதே வாழ்வின் இயல்பு என்று கூறுவதாக அமைகிறது இப்பாடல்.

### வினாநிரல் விடுகதை

தன் தலைவியின் கூந்தல் மணத்தைவிட சிறந்த மணம் வேறெந்தப் பூக்களிலும் உள்ளதா? என்று வண்டிடம் கேட்கும் குறிஞ்சித் தலைவனின் கூற்று, விடுகதையைக் கேட்டு பதிலை எதிர்பார்ப்பது போலவே உள்ளது இப்பாடல்.

**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ?**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்**
**செறியெயிற் றரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீயறியும் பூவே**[4]

இவ்வாறு விடுகதை போன்று பல்வேறு பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

### குறி கூறுதல்

தெய்வ அருள் இறங்கி ஆடும் சாமியாடிகளின் சொற்களே குறி கூறுதல் என நாட்டுப்புற மக்களால் அழைக்கப்படுகிறது. திருவிழா காலங்களில் கம்பம், கும்பம் எடுக்கும் சடங்கின் போது சாமியாடிகள் குறி கூறுகின்றனர். இவ்வாறு சாமியாடிகள் அனைவரும் பூசாரிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். வாழ்வில் இன்ப துன்பங்கள் இயல்பானதாகும். நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் துன்பங்களை எதிர்க்கொள்ள இயலாத நிலையிலும் குறிப்பிட்ட நேரத்தில் எடுக்க வேண்டிய முடிவுகளை எடுக்க முடியாத நிலையில் மக்கள் சாமியாடிகளிடம் குறி கேட்க வருகின்றனர். சங்க கால மக்களிடமும் இப்பழக்கம் வெறியாடல் அல்லது வெறியயர்தல் என்ற வழிபாட்டு வழக்கம் இருந்து வந்துள்ளது.

வெறி என்பதற்கு மணம் என்னும் பொருள் உண்டு. முருகனை வழிபடும் இடத்தே மிக்க மணமுள்ள பூக்களும் இலைகளும் புகையும் சூழ்ந்திருப்பதால் அந்த இடத்தை வெறிக்களம் என்று அழைத்தனர்.

**வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்**

இதனை நற்றிணையில் பார்க்க முடிகிறது. அக்களத்தின் நடுவே வேலை நட்டு அதைச் சுற்றி மக்கள் வட்டமாக அமர்ந்துக்கொள்வர். அடுத்து தம்மால் தீர்க்க முடியாத மனச்சிக்கல் அல்லது உடற்குறைகளை அதற்குரியோர் முன்மொழிந்து கூறுவர். முருகனை மனத்தில் வரித்து வழிபட்டு வெறியாட்டம் நிகழ்த்தி குறி சொல்வோனுக்கு வேலன் என்று பெயர். அவன் முருகன் பெயரை வாழ்த்தித் தன் மேல் முருகன் வந்து நிற்பதாக ஆடுவான். இது குறித்து சங்க இலக்கியக் குறிஞ்சிப் பாடல்களில் காணலாம்.

**ஆடு அணி அயர்ந்த அகன் பெரும் பந்தர்**
**வெண்போழ் கடம்பொடு சூடி, இன் சீர்**
**ஐது அமை பாணி இரீஇ, கைபெயரா**
**செல்வன் பெரும் பெயர் ஏத்தி வேலன்**
**வெறியயர் வியன் களம் பொற்ப, வல்லோன்**
**பொறி அமை பாவையின் தூங்கல் வேண்டின்**
**என் ஆம் கொல்லோ? தோழி**[5]

என்ற பாடலின் மூலம் சங்க காலத்தில் குறி சொல்லும் வழக்கம் வெறியாடல் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகின்றது.

### நிறைவாக

இன்றைய நாட்டுப்புற மக்களின் பண்பாட்டுக் கூறுகளாக காணப்படும் தெய்வ வழிபாடு, நேர்த்திக்கடன், நாட்டுப்புறப் பாடல்கள், விடுகதை மற்றும் குறி கூறுதல் போன்றன பலவும் நாட்டுப்புற மக்களால் வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத்தகையைப் பண்பாட்டுக் கூறுகள் பலவும்சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இதன் மூலம் நாட்டுப்புற பண்பாட்டுக் கூறுகள்

*சங்க கால தமிழர்களிடமிருந்தே வழிவழியாக வந்திருக்கலாம் எனக் கருத முடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**


1. *தமிழக அரசு பாடநூல், இந்தியப் பண்பாடு, (மேனிலைப்பள்ளி இரண்டாமாண்டு), ப.1*
2. *மேலது, ப.2*
3. *இந்திரன்(தொ.ஆ) வேரும் விழுதும், ப.9*
4. *கலித்தொகை, பாட.83, 1-15*
5. *அகநானூறு, பா.122, 1-2*
6. *குறுந்தொகை, பா.104,*
7. *குறுந்தொகை, பா.362*
8. *சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், ப.23*
9. *நா.வானவாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.125*
10. *புறநானூறு, பா.112.*
11. *தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருள். செய்யுளியல். நூற். 78*
12. *பெரும்பாணாற்றுப்படை, பா. 459*
13. *கலித்தொகை, பா. 9*
14. *குறுந்தொகை, பா. 3*
15. *அகநானூறு, பா. 98.*